சுப்ரீம் கோர்ட் ஜட்ஜுக்கு முன்னாலேயே அவர்கள் சொன்னார்கள். ஆக, அந்தப் பிரச்சினைகளையெல்லாம் இந்தக் கமிஷன் பரிந்துரைக்கு எடுத்துக் கொள்ளும்.

முற்பகல் 9.40

கடைசியாக மாநிலச் சட்டங்கள் மட்டுமின்றி இந்த மாநிலத்திற்குப் பொருந்தும் மத்தியச் சட்டங்களுக்கும் தேவைப்படும் மாறுதல்களை அல்லது திருத்தங்களைச் செய்யும். இன்றைக்கு கண்கரன்ட் லிஸ்ட் என்று ஒரு லிஸ்ட் இருக்கிறது. இதன்கீழ் ஒரு சட்டத்தை மாநிலமும் உருவாக்கலாம், மத்திய அரசும் உருவாக்கலாம். அதில் தற்போது பொதுவாக மத்திய அரசினுடைய கை ஓங்கி இருக்கிறது. அந்தக் கண்கரன்ட் லிஸ்ட்டிலே உள்ள முரண்பாடுகளையும், பாரபட்சங்களையும், டிஸ்டார்ஷன்களையும், லேப்சஸ்-ஐயும், இன்-ஈக்குவிட்டியையும் களைவதை ஒரு கொள்கையாக லா கமிஷன் எடுத்துக்கொண்டு, இந்த 7 கொள்கைகளுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரைவில் அதை அமைப்பார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவ்வளவு நீண்ட விடைக்குப் பிறகு துணைக் கேள்விகள் இராதென்று நினைக்கிறேன்.

வினா எண் 103, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

103—

வெள்ள நிவாரண நிதி

*வினா எண். 3908— திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கத்திற்கு நிவாரண நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ. 56 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : வினா எண். 104, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

104—

மகளிருக்கென தொழிற்பயிற்சிப்பள்ளி

*வினா எண். 5289 திரு. தி. சாத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மகளிருக்கென தனியாக தொழிற்பயிற்சிப்பள்ளி (ITI) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற பெருநகரங்களில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை கிண்டியிலும், கோயம்புத்தூரிலும், திருச்சி மாவட்டம் புள்ளம்பாடியிலும் ஏற்கனவே மகளிருக்கென தனியாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மதுரையில் மகளிருக்கென தனியாக ஒரு அரசின் தொழிற் பயிற்சி நிலையம், 1992 ஆகஸ்ட்டில் துவங்கப்படவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஜில்லாவிலும் நிறைய பெண்கள் படித்து விட்டு, கலியாணமும் ஆகி, குழந்தைகளோடு வேலையில்லாமல் அலைகிறார்கள். இப்படிப்பட்ட பெண்கள் எல்லாம் ஐ.டி.ஐ. படிக்கும் ஒரு நிலையை உருவாக்கிக் கொடுத்தால், பல பேர்கள் படித்து, சுயமாகத் தொழில் துவங்க வாய்ப்பாக இருக்கும். எனவே மதுரையில் மட்டும் வரக்கூடிய ஆண்டில்